வீரமுனை அறிவுச்சுரங்கம் கல்வியகம் வெளியீடு

# அறிவுச்சுரங்கம்

அஜீந்தன் ஆசானின்

**5 தரம்**

ARIBUCHCHURANGAM INSTITUTE VEERAMUNAI

# புலமைப்பாதை

# கணிதம்

## (100 வினாக்கள்)

வெளியீடு 2

புதிய பாடத்திட்டம்

ஆசிரியர்
S.அஜீந்தன் (B.A)
077 26 333 89

அரிய சாதனைகள் வலிமையினால் அல்ல, விடாமுயற்சியினால் சாதிக்கப்படுகின்றன.

01) ரக்ஷாயன் தன்னிடமிருந்து பணத்தின் கால் பகுதியை செலவு செய்து புத்தகம் ஒன்றினை வாங்கினான். புத்தகத்தின் விலை ரூபாய் 800 எனின், ரக்ஷாயனிடம் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு?

..........................................................................................

..........................................................................................

02) கிபிசாணன் ஒரு வருடம் முழுவதும் 10808 தேங்காய்களை உரித்தான். கேமன், கிபிசாணனை விடவும் இரண்டு தேங்காய்கள் கூடுதலாக உரித்தான். கேமன் உரித்த தேங்காய்கள் எத்தனை?

..........................................................................................

..........................................................................................

03) திரைப்படம் ஒன்றினைப் பார்ப்பதற்காக 4546 பிள்ளைகளும், 3526 வயது வந்தவர்களும் வந்திருந்தனர். எனின், திரைப்படம் பார்க்க வந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

..........................................................................................

..........................................................................................

04) பண்ணையில் இருந்த மாடுகளின் கால்களின் எண்ணிக்கை 84 ஆகும். கோழிகளின் கால்களின் எண்ணிக்கை 82 ஆகும். இப்பண்ணையிலுள்ள மாடுகள், கோழிகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

..........................................................................................

05) மணிக்கு 45 கிலோமீற்றர் வேகத்தில் பிரயாணம் செய்யும் பஸ் வண்டி ஒன்று கண்டியிலிருந்து காலிக்கு சென்றடைய நான்கு மணி நேரம் எழுத்தது. எனின், கண்டியிலிருந்து காலியிற்கான தூரம் எவ்வளவு?

..........................................................................................

..........................................................................................

06) ஒரு நீர்த்தாங்கியின் மொத்தக் கொள்ளளவு 8750 லீற்றர் ஆகும். அதில் தற்பொழுது 3695 லீற்றர் நீர் உண்டு. தாங்கியை நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?

..........................................................................................

..........................................................................................

07) மாம்பழம் ஒன்றின் விலை ரூ.12 ஆகும். கொய்யாப்பழம் ஒன்றின் விலை ரூ.16 ஆகும். எனின், இரண்டு மாம்பழங்களையும், இரண்டு கொய்யாப்பழங்களையும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

.......................................................................................................

.......................................................................................................

08) பெட்டி ஒன்றிலுள்ள சிவப்பு நிற முட்டைகளின் எண்ணிக்கை 35 ஆகும். வெள்ளை நிற முட்டைகளின் எண்ணிக்கை அதனை விட 15 அதிகம் எனின், பெட்டியிலுள்ள மொத்த முட்டைகளின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................

.......................................................................................................

09) 36 தோடம்பழங்களை சமமாகப் பிரித்து ஒன்பது கூடைகளில் இட்டால் ஒரு கூடையிலுள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................

.......................................................................................................

10) அன்னாசிப்பழம் ஒன்றின் நிறை , பப்பாசிப்பழம் இரண்டின் நிறைக்குச் சமமாகும். 80 பப்பாசிப்பழங்களின் நிறைக்கு எத்தனை அன்னாசிப்பழங்களின் நிறை சமமாகும்?

.......................................................................................................

.......................................................................................................

11) பெட்டி ஒன்றில் 546 மாங்காய்களும், இன்னுமொரு பெட்டியில் 184 மாம்பழங்களும் உள்ளன. இரண்டு பெட்டிகளிலும் உள்ள மாம்பழங்கள் எத்தனை?

.......................................................................................................

.......................................................................................................

12) தோடம்பழம் ஒன்றின் விலை ரூ.35 ஆகும். ஐந்து தோடம்பழங்களின் விலை யாது?

.......................................................................................................

.......................................................................................................

13) ஒரு வகுப்பில் 45 பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் சமமாக மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டனர். எனின், ஒரு குழுவில் உள்ள பிள்ளைகள் எத்தனை?

.......................................................................................................

.......................................................................................................

14) 3 லீற்றர் 500 மில்லிலீற்றர் குளிர்பானத்தினை 500 மில்லிலீற்றர் வீதம் எத்தனை பாத்திரங்களுக்கு ஊற்றலாம்?

.......................................................................................................

.......................................................................................................

15) அச்சரா ஒரு மணித்தியாலத்தில் 40 மலர்மாலைகளைக் கட்டுவாள். தனுஸ்ரி 30 நிமிடங்களில் 10 மலர்மாலைகளைக் கட்டுவாள். எனின், அச்சரா, 100 மாலைகளைச் கட்டும் போது தனுஸ்ரி எத்தனை மலர்மாலைகளைச் செய்வாள்?

.......................................................................................................

.......................................................................................................

16) குறிப்பிட்ட ஒரு வேலையை செய்வதற்கு 3 மனிதர்களுக்கு 4 நாட்கள் எடுக்கும். அதே வேலையை 6 மனிதர்களுக்குச் செய்வதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?

.......................................................................................................

.......................................................................................................

17) மு.ப 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை மு.ப 11.30 மணிக்கு இடைவேளை வழங்கப்பட்டது. எனின், அது வரை பாடசாலை நடைபெற்ற மணித்தியாலங்கள் எத்தனை?

.......................................................................................................

.......................................................................................................

18) ஒரு பெட்டியில் 615 பிஸ்கட்டுக்கள் உள்ளன. ஒருவருக்கு 60 பிஸ்கட்டுக்கள் வீதம் எத்தனை பேருக்கு வழங்கலாம்? எஞ்சும் பிஸ்கட்டுக்கள் எத்தனை?

.......................................................................................................

.......................................................................................................

19) புகைவண்டியொன்றில் 564 பிரயாணிகள் உள்ளனர். முதல் தரிப்பிடத்தில் 83 பேர் இறங்கிச் சென்றதுடன் மேலும், 28 பேர் புகைவண்டியில் ஏறினர். இப்போது புகைவண்டியில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

.............................................................................................................

.............................................................................................................

20) அரிசி மூட்டையின் நிறை 50கிலோக்கிராம் ஆகும். அரிசி உள்வாங்கப்பட்ட உறையின் நிறை 1 ½ கிலோக்கிராம் எனின், அதிலுள்ள அரிசியின் நிறை யாது?

.............................................................................................................

.............................................................................................................

21) 3500 மில்லிலீற்றர் கொள்ளவுள்ள பாத்திரத்தில் 1200மில்லிலீற்றர் நீர் உண்டு. அப்பாத்திரத்திற்கு இன்னும் 3 லீற்றர் நீர் ஊற்றினால் அப்பாத்திரத்தில் இருந்து நிரம்பி வெளியேறும் நீரின் அளவு யாது?

.............................................................................................................

.............................................................................................................

22) ஒரு பிள்ளைக்கு 5 பிஸ்கட்டுக்கள் வீதம், 32 பிள்ளைக்கு தேவையான பிஸ்கட்டுக்கள் எத்தனை?

.............................................................................................................

.............................................................................................................

23) வருடத்தில் 30 தினங்களைக் கொண்ட மாதங்களை முறைப்படி எழுதுக?

.............................................................................................................

.............................................................................................................

24) வகுப்பறை ஒன்றில் மூன்று கதிரைகளைக் கொண்ட 14 வரிசைகளும், நான்கு கதிரைகளைக் கொண்ட 6 வரிசைகளும் உண்டு. அவ்வரிசையிலுள்ள மொத்தக் கதிரைகள் எத்தனை?

.............................................................................................................

.............................................................................................................

25) புத்தக அலுமாரி ஒன்றில் ஒரு தட்டில் 12 புத்தகங்கள் வைக்கலாம் எனின், 672 புத்தகங்களை வைப்பதற்கு எத்தனை தட்டுக்கள் தேவை?

..........................................................................................................

..........................................................................................................

26) 3 சவர்க்காரக் கட்டிகளை வாங்கும் போது ஒன்று இலவசமாக வழங்கப்படும். 60 சவர்க்காரக் கட்டிகளை வாங்கும் போது எத்தனை இலவசமாகக் கிடைக்கும்?

..........................................................................................................

..........................................................................................................

27) ஒரு மோட்டார் வண்டியில் 4 பேர் பயணம் செய்ய முடியும். 36 பேர் பயணிக்க எத்தனை மோட்டார் வண்டிகள் தேவை?

..........................................................................................................

..........................................................................................................

28) ஒரு தீப்பெட்டியில் 48 தீக்குச்சிகள் உண்டு. அவ்வாறான 8 பெட்டிகளில் எத்தனை தீக்குச்சிகள் உண்டு?

..........................................................................................................

..........................................................................................................

29) உபசரிப்பிற்காக 900 மில்லிலீற்றர் குளிர்பானம் கொண்டு வரப்பட்டது. அதில் 672 மில்லிலீற்றர் குளிர்பானம் பருகிய பின்பு எஞ்சிய பானத்தின் அளவு யாது?

..........................................................................................................

..........................................................................................................

30) 12 பென்சில்களை கொண்ட நான்கு பெட்டிகளும், 60 பென்சில்களைக் கொண்ட 3 பெட்டிகளும் உண்டு எனின், ஏழு பெட்டிகளில் உள்ள பென்சில்கள் எத்தனை?

..........................................................................................................

..........................................................................................................

31) ஒருவருக்கு 3 புத்தகம் வீதம் 438 புத்தகங்களை எத்தனை பேருக்கு பங்கிடலாம்?

.............................................................................................

.............................................................................................

32) ஒரு லீற்றர் 500 மில்லிலீற்றர் குளிர்பானத்தினை 275 மில்லிலீற்றர் அளவான 4 கிண்ணங்களில் ஊற்றிய பின்பு எஞ்சும் குளிர்பானத்தின் அளவு யாது?

.............................................................................................

.............................................................................................

33) புத்தக சாலை ஒன்றில் 866 தமிழ்ப்புத்தங்களும், 68 ஆங்கிலப் புத்தகங்களும் உண்டு எனின், புத்தக சாலையிலுள்ள மொத்தப் புத்தகங்கள் எத்தனை?

.............................................................................................

.............................................................................................

34) நோயாளி ஒருவருக்கு 6 மணித்தியாலத்திற்கு ஒருமுறை மருந்து அருந்துமாறு கூறப்பட்டது. மு.ப 6.00 மணிக்கு முதல் முறை மருந்து அருந்தினார் எனின், மூன்றாவது முறை எத்தனை மணிக்கு மருந்தை அருந்துவார்?

.............................................................................................

.............................................................................................

35) 2 வில்லைகள் வீதம் ஒரு நாளைக்கு மூன்று முறை பாவிக்குமாறு 30 வில்லைகள் வழங்கப்பட்டன. எனின், அது எத்தனை நாளைக்குப் போதுமானது?

.............................................................................................

.............................................................................................

36) 5 கிலோக்கிராம் பூசணிக்காயில், இரண்டு கிலோக்கிராம் 350 கிராம் வெட்டியெடுக்கப்பட்டால் எஞ்சிய பூசணிக்காயின் நிறை யாது?

.............................................................................................

.............................................................................................

37) 132 மாங்காய்களில் கால் பகுதி பழுதடைந்தது எனின், பழுதடையாத மாங்காய்கள் எத்தனை?

.............................................................................................................

.............................................................................................................

38) சுஜாதா வித்தியாலத்தில் உள்ள மாணவர்களை விடவும் 2325 மாணவர்கள் கூடுதலாக ராகுல வித்தியாலயத்தில் உள்ளனர். ராகுல வித்தியாலத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 3516 எனின், இரண்டு பாடசாலைகளிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.............................................................................................................

.............................................................................................................

39) மிளகாய்த் தூள் 150 கிராமின் விலை ரூ.52.50 ஆகும். எனின், ஒரு கிலோக்கிராம் மிளகாய்த் தூளின் விலை யாது?

.............................................................................................................

.............................................................................................................

40) பிள்ளையினதும், புத்தகப்பையினதும் நிறை 45kg ஆகும். புத்தகப்பையின் நிறை 12 kg எனின், பிள்ளையின் நிறை யாது?

.............................................................................................................

.............................................................................................................

41) ரூ.14 விலையுடைய 6 பேனாக்களையும், ரூ. 53 விலையுடைய 2 சித்திரக் கொப்பிகளையும் வாங்க வேண்டிய பெரேராவிடம் 150 ரூபாய் உள்ளது. எனின், பொருட்களை வாங்க இன்னும் தேவையான பணம் எவ்வளவு?

.............................................................................................................

.............................................................................................................

42) வேலி ஒன்றின் 5மீற்றர் இடைவெளிக்கொன்றாக 15 கொங்கிறீர் தூண்கள் நடப்பட்டது எனின், முதலாவது தூணிலிருந்து கடைசித் தூண் வரையிலான தூரம் யாது?

.............................................................................................................

.............................................................................................................

43) 492 மாம்பழங்கள் 6 பெட்டிகளில் சமமாக பொதி செய்யப்பட்டால், ஒரு பெட்டியிலுள்ள மாம்பழங்கள் எத்தனை?

.......................................................................................................

.......................................................................................................

44) வாழைப்பழசீப்பு ஒன்றில் 14 பழங்கள் காணப்பட்டன. ஒரு பழத்தின் விலை ரூ.6.50 எனின், வாழைப்பழச் சீப்பிற்கான விலை யாது?

.......................................................................................................

.......................................................................................................

45) மாம்பழம் ஒன்றின் விலை ரூ.12 ஆகும். அப்பிள் பழம் ஒன்றின் விலை ரூ.15 ஆகும். கொய்யாப்பழம் ஒன்றின். விலை ரூ.5 எனின், ஒருவருக்கு 3 மாம்பழம், 2 அப்பிள்பழம், 5 கொய்யாப்பழம் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

.......................................................................................................

.......................................................................................................

46) ஒரு கிலோக்கிராம் தேயிலையின் விலை ரூபாய் 200 , சீனி1 **kg** ரூ.90.00 எனின், **250g** தேயிலையும், **500g** சீனியும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

.......................................................................................................

.......................................................................................................

47) அம்பிகாவின் நிறை **25kg 600g** ஆகும். அவளது தாய் அவளை விடவும் இரு மடங்கு நிறையுள்ளவர் எனின், அம்பிகாவின் அம்மாவின் நிறை யாது?

.......................................................................................................

.......................................................................................................

48) 318 சவர்க்காரக் கட்டிகளை மூன்று கட்டிகள் வீதம் உறையிடுவதற்குத் தேவையான உறைகள் எத்தனை?

.......................................................................................................

.......................................................................................................

49) ஒரு குளிர்பான போத்தலினால், மூவருக்கு பரிமாறலாம். 17 பேருக்கு பரிமாற எத்தனை குளிர்பானப் போத்தல்கள் தேவை?

..............................................................................................

..............................................................................................

50) ஒரு பிள்ளைக்கு மூன்று பிஸ்கட்டுக்கள் வீதம் 3 நாளைக்கு 72 பிள்ளைகளுக்கு கொடுக்கத் தேவையான பிஸ்கட்டுக்கள் எத்தனை?

..............................................................................................

..............................................................................................

51) பி.ப 12.50 மணிக்கு வந்து சேர வேண்டிய புகையிரதம் ஒரு மணித்தியாலம் 15 நிமிடம் கழித்து வந்து சேர்ந்தது. எனின், புகையிரதம் வந்து சேர்ந்த நேரம் யாது?

..............................................................................................

..............................................................................................

52) ஒரு பாத்திரத்தினை நிரப்புவதற்கு 5 லீற்றர் 540 மில்லிலீற்றர் நீர் தேவை எனின், அது போன்று நான்கு பாத்திரங்களை நிரப்ப தேவையான நீர் எவ்வளவு?

..............................................................................................

..............................................................................................

53) ஒரு சித்திரக் கொப்பியின் விலை ரூ.25 , பென்சில் பெட்டியொன்றின் விலை ரூ.45 எனின், இரண்டு பொருளையும் வாங்கிய ஒருவன் ரூ.100 ஐ செலுத்தினான். அவன் பெறும் மீதிப்பணம் எவ்வளவு?

..............................................................................................

..............................................................................................

54) நிமலின் நிறையை விடவும் நிமலின் அம்மாவின் நிறை இரண்டு மடங்காகும். அம்மாவின் நிறை 56kg எனின், நிமலின் நிறை யாது?

..............................................................................................

..............................................................................................

55) 750 மில்லிலீற்றர் வீதம் கொண்ட 6 போத்தல் குளிர்பானத்தினை ஒரு பாத்திரத்தில் ஊற்றிய பின் அப்பாத்திரத்தில் உள்ள குளிர்பானத்தின் அளவு யாது?

..........................................................................................................

..........................................................................................................

56) ஒரு கிலோ அரிசியின் விலை ரூ.63 ஆகும். எனின், **2 kg 500g** அரிசியின் விலை யாது?

..........................................................................................................

..........................................................................................................

57) பாத்திரம் ஒன்று கொள்ளக்கூடிய நீரின் அளவு 8750 லீற்றர் ஆகும். அதில் 3695 லீற்றர் நீர் உள்ளது எனின், அதனை நிரப்பத் தேவையான நீரின் அளவு யாது?

..........................................................................................................

..........................................................................................................

58) **5ml** அளவினை உடைய இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் ஒரு நோயாளிக்கு வழங்குவதற்கு தேவையான மருந்து எவ்வளவு?

..........................................................................................................

..........................................................................................................

59) **5m** நீளமான கயிற்றிலிருந்து **20cm** நீளமான 5 துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டால் எஞ்சிய கயிற்றின் நீளம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

60) மு.ப 10.00 மணிக்கு புறப்பட இருந்த பேருந்து ஒன்று 20 நிமிடங்கள் தாமதமாகவே பிரயாணத்தினை ஆரம்பித்தது. பிரயாணத்திற்காக 4 மணி 45 நிமிடங்கள் எடுத்தது எனின், பிரயாணத்தினை முடித்த நேரம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

61) 320 புத்தகங்களை 3 புத்தகங்கள் வீதம் எத்தனை பேருக்கு வழங்கலாம்? எஞ்சிய புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

..................................................................................................

..................................................................................................

62) 1996 யூலை 21 ஆந்திகதி சமந்தி பிறந்த திகதி ஆகும். எனின், 2021 யூலை 21 ஆந்திகதி சமந்தியின் வயது எத்தனை?

..................................................................................................

..................................................................................................

63) ஒரு லீற்றர் 500 மி.லீ நீரினை சம அளவுள்ள 4 பாத்திரங்களில் ஊற்றினால் ஒரு பாத்திரத்திலுள்ள நீரின் அளவு யாது?

..................................................................................................

..................................................................................................

64) சிகானிடம் வேலுவை விட 3 தோடம்பழங்களும், யோசப்பை விட 2 தோடம்பழங்களும் அதிகமாக உண்டு. வேலுவிடம் உள்ள தோடம்பழங்கள் 4 எனின், யோசப்பிடம் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

..................................................................................................

..................................................................................................

65) 500g சீனியின் விலை ரூபாய் 47 ஆகும். 100 கிராம் தேயிலையின் விலை ரூபாய் 42 ஆகும். எனின், சீனி **1kg** இனதும் தேயிலை **200g** இனதும் விலை யாது?

..................................................................................................

..................................................................................................

66) **500g** சீனியையும், **200g** தேயிலையும், வாங்கிய ஒருவர் வியாபாரியிடம் ரூ.200 ஐக் கொடுத்தால் பெறப்படும் மீதித் தொகை யாது?

..................................................................................................

..................................................................................................

67) 2 லீற்றர் கொள்ளளவுடைய பாத்திரத்தினை நீரால் நிரப்ப 200 மில்லிலீற்றர் அளவுடைய பாத்திரத்தினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?

.........................................................................................................

.........................................................................................................

68) அப்பா 8 பழக்கன்றுகள் 2 தென்னங்கன்றுகள் 11 பூக்கன்றுகள் , 2 மிளகாய்க்கன்றுகள் , 2 கத்தரிக்கன்றுகள் என்பவற்றினை வீட்டுத் தோட்டத்தில் நாட்டினார். எனின், அப்பா நாட்டிய மொத்தக் கன்றுகள் எத்தனை?

.........................................................................................................

.........................................................................................................

69) பழவடி ஒன்றில் கொய்யாவை விட இரு மடங்கு தோடம்பழமும் ,தோடம்பழம் போல் இரு மடங்கு மாம்பழமும் உண்டு. கொய்யாவின் எண்ணிக்கை 25 எனின், பழவடியிலுள்ள மாம்பழங்கள் எத்தனை?

.........................................................................................................

.........................................................................................................

70) 40 நிமிடத்திற்கு ஒரு முறை ஒலிதரும் மணியொன்று , மு.ப 6.15 இற்கு மணிக்கு இரண்டாம் தடவையாக ஒலித்தது. எனின், அது நான்காவது தடவையாக எத்தனை மணிக்கு ஒலிக்கும்?

.........................................................................................................

.........................................................................................................

71) ஒரு கி.கி அரிசியின் விலை ரூ.48 ஆகும். 2 கி.கி 500 கி அரிசியின் விலை யாது?

.........................................................................................................

.........................................................................................................

72) மு.ப 9 மணிக்கு புறப்பட இருந்த பஸ்வண்டி ஒன்று , 30 நிமிடங்கள் தாமதித்தே பிரயாணத்தை ஆரம்பித்தது. நான்கு மணி 15 நிமிடங்கள் பிரயாணத்திற்காக செலவாகியது எனின், பஸ் வந்தடைந்த நேரம் யாது?

.............................................................................................................

.............................................................................................................

73) ரூ.47.00 விலையுடைய அப்பியாசக் கொப்பியொன்றும், ரூ.12.50 சதம் விலையுடைய பேனாவொன்றினையும் வாங்குவதற்கு விக்கியிடம் இருப்பது ரூ.50.00 எனின், விக்கிக்கு குறித்த பொருட்களை வாங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணம் தேவை?

.............................................................................................................

.............................................................................................................

74) ஒரு போத்தலில் உள்ள நீரின் அளவு **750ml** ஆகும். அவ்வாறான 12 போத்தல்களிலும் உள்ள நீரின் அளவைக் காண்க?

.............................................................................................................

.............................................................................................................

75) ஒரு கயிற்றை சமமாக இரண்டு துண்டுகளாக வெட்டி அதில் ஒரு துண்டினை மீண்டும் 4 துண்டுகளாக வெட்டிய போது அத்துண்டின் நீளம் 1 மீற்றர் எனின், முழுக்கயிற்றின் நீளம் யாது?

.............................................................................................................

.............................................................................................................

76) புகையிரத நிலையத்திற்கு 14:20 மணிக்கு வரவேண்டிய புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதமாகியே வரும் என அறிவிக்கப்பட்டது. எனின், புகையிரதம் வந்து சேரும் நேரம் யாது?

.............................................................................................................

.............................................................................................................

77) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒன்றில் ஆனந்தி பெற்ற புள்ளி சாந்தி பெற்ற புள்ளியை விட 10 அதிகமாகும். கவிதா சாந்தியை விட இரண்டு புள்ளிகள் குறைவாகப் பெற்றாள். ஆனந்தி பெற்ற புள்ளிகள் 185 எனின், கவிதா பெற்ற புள்ளி யாது?

..........................................................................................................

..........................................................................................................

78) குமாரின் தற்போதய வயது 8 வருடங்களாகும். அது அவனது சகோதரியின் வயதை விடவும் 4 மடங்காகும். எனின், குமாரின் சகோதரியின் வயது யாது?

..........................................................................................................

..........................................................................................................

79) சுதாகர் தன்னிடமிருந்த பணத்தின் அரைப்பகுதியை கொடுத்து புத்தகம் ஒன்று வாங்கினான். தற்போது அவனிடம் எஞ்சியுள்ள தொகை ரூ.125 எனின், அவனிடம் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு?

..........................................................................................................

..........................................................................................................

80) இரண்டு அப்பிள்பழம் வாங்கும் பணத்திற்கு இரண்டு மாம்பழமும், ஒரு கொய்யாப்பழமும் வாங்கலாம். நான்கு கொய்யாப்பழம் வாங்கும் பணத்திற்கு இரண்டு அப்பிள்ப்பழம் வாங்கலாம். எனின், மாம்பழம் இரண்டின் விலை எத்தனை கொய்யாப்பழத்தின் விலைக்குச் சமனாகும்?

..........................................................................................................

..........................................................................................................

81) அமாலியிடம் இருந்த பணத்தின் கால் பகுதியை செலவழித்து புத்தகம் ஒன்றியை வாங்கினாள். புத்தகத்தின் விலை ரூ.76 எனின், அமாலியிடம் இருந்து பணம் எவ்வளவு?

..........................................................................................................

..........................................................................................................

82) பாரதி தமிழ் மகாவித்தியாலத்தில் உள்ள ஆண் மாணவர்களின் எண்ணிக்கை 425 ஆகும். மாணவிகளின் எண்ணிக்கை 138 ஆகும். அப்பாடசாலையிலுள்ள மொத்த மாணவர் தொகை யாது?

.......................................................................................................

.......................................................................................................

83) 416 புத்தகங்களை 4 புத்தகங்கள் வீதம் பொதி செய்யப்பட்டது எனின், அவ்வாறு பொதி செய்யப்பட்ட பொதிகள் எத்தனை?

.......................................................................................................

.......................................................................................................

84) கடந்த புதன்கிழமை மே 1 ஆகும். நேற்று மே 3 ஆந்திகதி ஆகும். இன்றைய தினம் என்ன கிழமையாகும்?

.......................................................................................................

.......................................................................................................

85) பேருந்து வண்டியில் ஏறிய தரிந்து 7 டிக்கட் வாங்கிக் கொண்டு 50 ரூபாய் தாள் நாணயம் ஒன்றினைக் கொடுத்தான். பேருந்து நடத்துநர் தரிந்துவிடம் இன்னும் ரூ.18 ஐ வாங்கிக் கொண்டு ரூ.20 ஐ மீதியாகக் கொடுத்தான். எனின் தரிந்துவிற்கான பேருந்துக் கட்டணம் யாது?

.......................................................................................................

.......................................................................................................

86) பென்சில் ஒன்றின் விலை ரூ.12.50 ஆகும். பேனா ஒன்றின் விலை ரூ.15 ஆகும். சப்தனா 3 பென்சில்களும், 2 பேனாக்களும் வாங்கினாள் எனின், அவள் அவற்றிற்காக கொடுத்த பணம் எவ்வளவு?

.......................................................................................................

.......................................................................................................

87) புகைவண்டியில் இருந்த பிரயாணிகளின் எண்ணிக்கை 625 ஆகும். முதலாவது தரிப்பிடத்தில் 125 பேர் இறங்கிச் செல்ல 25 பேர் புதிதாக வந்தனர் எனின், தற்போது புகையிரதத்தில் உள்ள பிரயாணிகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................

..........................................................................................................

88) ஒருவருக்கு 3 புத்தகங்கள் வீதம் , 320 புத்தகங்கள் எத்தனை பேருக்குப் பங்கிடலாம்?

..........................................................................................................

..........................................................................................................

89) 460 மாம்பழங்களை 4 பெட்டிகளில் சமமாக அடைக்கப்பட்டால் ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங்கள் எத்தனை?

..........................................................................................................

..........................................................................................................

90) வகுப்பறை ஒன்றில் 2 கதிரைகளைக் கொண்ட 12 வரிகளும், 3 கதிரைகளைக் கொண்ட 6 வரிகளும் உள்ளது எனின், வகுப்பறையில் உள்ள கதிரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................................................

..........................................................................................................

91) 6 அழிறப்பர்களைக் கொண்ட 5 பெட்டிகளும், 8 அழிறப்பர்களைக் கொண்ட 3 பெட்டிகளும் உள்ளன. இந்த 7 பெட்டிகளிலும் உள்ள அழிறப்பர்கள் எத்தனை?

..........................................................................................................

..........................................................................................................

92) **1500ml** கொள்ளளவுடைய பாத்திரம் ஒன்றில் **900ml** நீர் உண்டு. இன்னும் **900ml** நீர் ஊற்றினால் நிரம்பி வெளியேறும் நீரின் அளவு யாது?

..........................................................................................................

..........................................................................................................

93) 100m நீளமுடைய நாடாவொன்றில் மத்தியில் **15m** சேதமடைந்தது. அதனை அகற்றி விட்டு இரண்டு துண்டுகளையும் **5cm** வீதம் ஒன்றின் மேல் ஒன்று வைத்து ஒட்டிய பின், நாடாவின் நீளம் யாது?

.......................................................................................................

.......................................................................................................

94) திங்கட்கிழமையை விட செவ்வாய்க்கிழமை ரூபாய் 10 குறைவாகவும், செவ்வாயை விட புதன்கிழமை ரூபாய் 5 குறைவாகவும், ஒருவர் செலவழித்தார். அவர் செவ்வாய்க்கிழமை செலவழித்த பணம் ரூபாய் 30.00 எனின், அம்மூன்று நாட்களும் செலவழித்த தொகை யாது?

.......................................................................................................

.......................................................................................................

95) ரூபாய் 25 க்கு சித்திரக் கொப்பி ஒன்றும், ரூபாய் 12.50 இற்கு பேனை ஒன்றும் பெற்றுக் கொண்டு ஒருவர் ரூபாய் 150.00 ஐக் கொடுத்தால் அவர் பெறும் மீதித் தொகை யாது?

.......................................................................................................

.......................................................................................................

96) ஒருவருக்கு இரண்டு புத்தகங்கள் வீதம் 366 புத்தகங்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்?

.......................................................................................................

.......................................................................................................

97) 369 தோடம்பழங்களை 3 பெட்டிகளில் சமனாக அடுக்கினால், ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

.......................................................................................................

.......................................................................................................

98) 416 கொய்யாப்பழங்களை 4 பேர் சமனாக பங்கிட்டால் ஒருவருக்குக் கிடைக்கும் கொய்யாப்பழங்கள் எத்தனை?

..................................................................................................

..................................................................................................

99) ஒரு கூடையில் 306 பூக்கள் இருந்தன. இவற்றை 3 சம பகுதிகளாக பிரித்தால், ஒரு குவியலில் உள்ள பூக்கள் எத்தனை?

..................................................................................................

..................................................................................................

100) ஒரு பெட்டியில் 5 முட்டைகளை அடுக்கலாம் எனின், 300 முட்டைகளை அடுக்கத் தேவையான பெட்டிகள் எத்தனை?

..................................................................................................

..................................................................................................